*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 7TH NOVEMBER, 1980 No. 45

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



*Subscription*

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.

*Apply to:*
**The Manager,**
'Morning Star',
VADDUKODDAI.


## Silver Jubilee Celebrations of Miss Muriel Violet Hutchins

The Silver Jubilee Celebration of Miss Muriel Violet Hutchins was celebrated at Karuna Nilayam, Kilinochchi on the 29th of October with a full day programme. It was twentyfive years ago on this day that Miss Hutchins with a helper and a gardener took up residence in what is today 'Karuna Nilayam.' It was then virtually a jungle with no buildings except a small cottage.

The Bishop along with over a dozen clergy present concelebrated at the Holy Communion Service. The Ven. J. J. Gnanapragasam, the Archdeacon of Colombo preached the sermon. The Epistle was read by the Rev. S. Jeyanesan. The Gospel was beautifully intoned in the oriental manner by the Rev. A. C. Thambirajah. Mr. B. Simon and the Rev. Isaac Selvaratnam led the Litany. The Rev. Wesley Ariarajah participated in the Service and assisted with the chalice. The Rev. Sevak Sam Alfred led the closing prayers. The whole service was sung, the Anandanayagams being the instrumentalists. At the offertory procession, Miss Hutchins came up to the Altar and was blessed by the Bishop. A large gathering of Christians were present and participated in the Corporate Communion.

After the service, a cup of tea was served to all. The children of Karuna Nilayam then entertained the visitors with songs and dances and skits. The Parishioners of St. Paul's Church, Kilinochchi, provided a sumptuous lunch. In the evening, at 3-30 p. m. a garden party was organised for the special invitees of the public of Kilinochchi. This was followed by a public meeting presided over by the Archdeacon of Jaffna. Miss Hutchins was garlanded by a small child, an inmate of Karuna Nilayam. A special Tamil song composed by the Grama Sevaka setting forth the magnificent life and work of Miss Hutchins was then sung. The following spoke: The Rev. A. C. Thambirajah, the Rev. Fr. Michael, Sister Malar Chinniah, and Mr. A. K. Rajendram. Mrs. Rajadurai made a presentation to Miss Hutchins on behalf of the public of Kilinochchi. The Archdeacon then proposed a vote of thanks to all who helped in the arrangements for the celebrations and the chief guests. The meeting closed with prayer.

— *Cor.*

## India

The World's largest donor of medical manpower, according to a WHO Report, is India. Fifteen-thousand Physicians, constituting 13 per cent of the country's total medical manpower are currently working abroad. There is scarcely any country in the world where there are no Indian Physicians.

The country's Physician population ratio is 2.2 Physicians per 100.000. The ratio is low but it is higher than the country's sustainable level.

**Surplus**

With a per capita income of US 120 dollars per annum and a growth rate of 1.5 per cent, India could afford only 35,000 physicians. India, in effect, has a surplus of between 80,000 to 100,000 Physicians.

**Loss in investment**

It costs US Dollars 9600 to train a Physician. The 15,000 physicians now outside India represent a lost investment to the country of US Dollars 144 million.

It is good to know comparable statistics in Sri Lanka. At the moment figures are not available.

## Jubilarian Felicitated

Mr. T. Arumainayagam who has completed 25 years at Jaffna College as a member of the Office Staff was felicitated on 29-10-80.

A Thanksgiving Service was held at 3 p. m., led by Mr. S Jebanesan at which Mr. Nesan Kadirgamar preached the sermon.

The Jubilarian and his wife entertained the staff to tea at 4 p. m.

At the Staff Dinner at 7-30 p. m. to felicitate the Jubilarian, Mr. S. J. Manickam, on behalf of the "Round Table", congratulated Mr. Arumainayagam and referred to the traditions of hard work and noble endeavour which Mr. Arumainayagam had maintained in his carrier at the College.

Mr. A. R. Kadirgamar, the Principal, said how fortunate Jaffna College had always been in those who shouldered office responsibilities. Mr. Arumainayagam was one who was always prepared to go "the second mile" in the discharge of his duties.

Mr. Arumainayagam thanked the Staff for the honour they have done to him and to his wife on that occasion.

## Death of Bishop Sadiq

Bishop John Sadiq, formerly Bishop in Nagpur, India died in Australia recently. He was a muslim by birth. After his conversion he worked for a time on the staff of the SCM of India.

He served as the Secretary of the NCC of India for over ten years. A well known Ecumenical leader, he was Chairman of the WCC's Division of World Mission and Evangelism for 12 years.

In 1976, he went to Australia on the invitation of Bishop Ian Shevill. There he was priest in charge of the rural parish of Paterson in Newcastle Diocese.

*IN BRIEF*

O *Professor Geoffrey W. H. Lampe*, Regius Professor of Divinity in the University of Cambridge 1971—79 died recently at the age of 67. He was a leading Anglican Theologian with special interests in ecumenical relations.

O 1981 has been designated by the United Nations as the *International Year of the Disable Persons.* The WCC Central Committee has made a request that meeting places of Church conferences, assemblies etc., should be chosen with due regard to accessibility of disabled people.

O 1981 in Sri Lanka is the *Jubilee Year* of Adult Franchise — Celebrations centre round these main events:- Independence Day (Feb. 4) at Anuradhapura, Republican Constitution Day (May 22), a Sri Lankan Exhibition in London (June 20), a commemorative stamp of the State Council (July 7) and a Commemorative Meeting in October presided over by Her Majesty, Queen Elizabeth.

## Duty Free Shops

The Trade Ministry is finalising plans to open Duty Free Shops stocked with imported goods outside the passenger terminal building in the Colombo Port inorder to eliminate rackets in "gift-parcels" which are really not "gifts" but goods sent for commercial purposes by unscrupulous businessmen most of whom operate from Singapore.

Sri Lankans employed abroad could remit money to this shop and advise friends or relations to make their choice of goods.

Sri Lankans returning home need not also send "unaccompanied baggage" but bring in the money and make the purchases here.

This system will, it is hoped, help the country by bringing in foreign exchange and the passenger by enabling him to save on his freight charges.

There are an estimated 250,000 Sri Lankans working abroad.

*Obituary*

### Dr. S. W. C. Ratnesar

We are sorry to record the death which took place on 4-11-80 of Dr. Soundranayagam William Charles. Ratnesar at his residence at Lauries Road, Bambalapitiya. He was 87 years old.

The funeral Service was held on 5-11-80. Rev. S. S. Arulampalam officiated at the service, and paid the tribute. Rev. Duleep Fernando, Minister in charge of the Kollupitiya Methodist Church, preached the Serman.

The Committal rites at Kanatte were performed by Rev. S. S. Arulampalam.

## A Service of Thanksgiving

for the life and ministry of

**Rev. Daniel N. Muttaiah**

will be held on Saturday, 15th Nov. 1980 at 5-00 p. m. at the Methodist Church, Moor Road, Wellawatte.

## A Service of Thanksgiving

for the life and ministry of the late

**Rev. Kingsbury Sinnathamby Jeyasingam B.D.**

(Presbyter, Jaffna Diocese of the C. S. I.)

will be held on Saturday the 15th of November at 4-30 p. m. at the Chavakachcheri Church.

Your presence and prayers will be greatly appreciated.

**Rev. Sam Thampoe**
Secretary, J. D. C. S. I.

## IN MEMORIAM

IN LOVING MEMORY OF

**Regina Ratnammah Selliah**

Called home 15th Nov. 1976

*"What the heart has once owned and had it can never Lose"*

Affectionately remembered by her loved ones.

Pavilion View,
Vaddukoddai,
November, 1980.

## IN MEMORIAM

IN EVERLOVING MEMORY OF

**Rev. A. C. Thurairajah**

of Kopay

Called to rest 15-11-1974

*Precious memories of your loving and selfless deeds.*

Remain deep in our hearts. your loving wife, children and grandchildren.

"Parsonage"
Kilinochchi,
5-11-80.

Dr. S. W. C. Ratnesar married Grace, a daughter of the late Mr. D. C. Anketell and Mrs. Anketell of Uduvil and leaves behind seven children. His wife predeceased him a few years ago.

# உதயதாரகை
UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.
"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 140 ] 7 — 11 — 1980 [ இதழ் 45

## திருமதி டொறதி லொக்வூட்

சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சமுதாயத்தினையே பெரும் சோகத்துள் ஆழ்த்திய செய்தி அமெரிக்காவிலிருந்து வந்தது! இளைப்பாறிய பழம்பெரும் மிஷனரியும், அமெரிக்கா வாழ் ஈழ மக்களின் பரோபகாரியும், உதயதாரகையின் உற்ற சிநேகிதியுமான திருமதி டொறதி லொக்வூட் அம்மையார் இறந்துவிட்டார் என்பதே அந்தச் செய்தியாகும். லொக்வூட் தம்பதிகள் 1969-ம் ஆண்டு வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றியவர்கள். யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்ற பல நூறு மாணவர்கள் அவர்களை மிகவும் நேசித்தனர். யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சமுதாயம் லொக்வூட் தம்பதிகளைத் தமது செல்வமாக, ஆபத்திலுதவும் பெருங் கோட்டையாக நம்பிவந்தனர். திரு. லொக்வூட் அவர்கள் அமெரிக்கா திரும்பிய பின்னரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் உற்ற நண்பனாக விளங்கினார். ஐந்து வருடங்களுக்கு முன்னர் திரு. லொக்வூட் காலமாகியபொழுது யாழ்ப்பாணக் கல்லூரி பெருந் துயருற்றது.

கணவனின் மரணம் திருமதி லொக்வூட் அம்மையாரின் சேவையை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. ஈழத்திலிருந்து அமெரிக்கா சென்றவர்கள் எல்லாரும் அமெரிக்காவிலே தமக்கு ஒரு வீடு இருப்பதாகவே கருதினார்கள். ஏனெனில் திருமதி லொக்வூட் அவர்களுக்கெல்லாம் அன்பு செய்யவும் உதவி புரியவும் காத்துக்கொண்டேயிருப்பார். அவர் இனி இல்லை என்னும்பொழுது அமெரிக்காவில் எமக்கு இருந்த இனிய இல்லம் மறைந்துபோய்விட்டதே என்று ஏங்க வேண்டியிருக்கின்றது.

திருமதி லொக்வூட் அம்மையார் "உதயதாரகைப்" பத்திரிகையில் அதிக பற்றுடையவராக விளங்கினார். அதற்கு இயன்றபொழுதெல்லாம் செய்திகளும் கட்டுரைகளும் அனுப்பி வந்தார். அமெரிக்காவிலே உதயதாரகைக்கு அநேக சந்தாதாரர்களைத் தேடிக் கொடுத்தார். அம்மையார் மறைவு உதயதாரகைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

லொக்வூட் அம்மையாரின் வாழ்வு, பணிகளும் நல்ல கிரியைகளும் நிறைந்து காணப்பட்டது. வட்டுக்கோட்டையில் பணியாற்றிய காலமெல்லாம் அவர் மிகவும் உத்தமமான மிஷனரியாகத் திகழ்ந்தார். தீவுப் பற்று சுவிசேட ஊழியத்தில் ஈடுபாடு கொண்டு அதனை வாஞ்சையோடு வளர்த்து வந்தார். ஆங்கில பாடகர் குழு அவருடைய காலத்தில் அடைந்த சிறப்பினைப் போல வேறொரு காலத்திலும் அடையவில்லை. யாழ்ப்பாணத்தின் அனைத்துக் கல்லூரிகளின் வருடாந்த கரோல் ஆராதனையை உருவாக்குவதில் அவர் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது இவருடைய சேவைக்கு அனைத்துக் கல்லூரிகளின் கரோல் ஆராதனை அழிக்கமுடியாத ஞாபக சின்னமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஒழுங்கும் கட்டுப்பாடும் உற்சாகமும் நிறைந்த மிஷனரித் தொண்டர்.

அம்மையாரின் வாழ்வு நமக்கு அரிய பாடமாக விளங்குகின்றது. டொறதி லொக்வூட் தைரியமாக "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று கூறக்கூடியவர். அவருடைய வாழ்வு ஓர் இனிய வரலாறு.

---

செய்திச் சிதறல்

### யாழ். ஆறுகால்மடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம் ஆறுகால் மடம் முன்பு இருந்த இடத்திலேயே மீண்டும் கட்டப்படவுள்ளது இதற்கான நிதியின் ஒரு பகுதியை ஆறுகால்மட நிர்வாகத்தினரும் மிகுதியைப் பொது மக்களிடமிருந்தும் சேகரிப்பதென்றும் யாழ். மாநகர முதல்வரும் ஆறுகால்மட புனரமைப்புக் குழுவும் நடாத்திய மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

### மரம் நாட்டு விழா

மாவிட்டபுரம் தொகுதியிலுள்ள கட்டுடை வீடமைப்புத் திட்டத்தில் வலிகாமம் தென்மேற்கு உதவி அரச அதிபர் திரு. K. கோபாலரத்தினம் தலைமையில் எதிர்வரும் 30-ம் திகதி மரம் நாட்டு விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம அதிதியாக கௌரவ மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. V. தர்மலிங்கம் கலந்துகொள்ளுவார்.

### குற்றத்தடுப்பு கருத்தரங்கு

அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடை செய்வது சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 8-ம் திகதி யாழ்நகரில் நடைபெறவுள்ளது. இதில் யாழ் சிறைச்சாலை, பொலீஸ் நிலையம் முதலான திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொள்வார்களாம். மேற்படி கருத்தரங்கை யாழ் ரோட்டரி கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

### இராட்சத மீன்

யாழ்ப்பாணப் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழையையடுத்து இருபத்தெட்டடி நீளமும் ஆறடி அகலமும் கொண்ட மீனொன்று தொண்டமானாற்றுக் கடற்கரையில் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. இதனைப் பெருந்திரளாக மக்கள் சென்று பார்வையிடுகின்றனராம்.

### செல்வி மியூரியல் ஹச்சின்ஸ் M. A. (Oxon) J. P. 25 வருட சேவை

செல்வி மியூரியல் ஹச்சின்ஸ் அம்மையார் கிளிநொச்சியில் பணியாற்றத் தொடங்கி இருபத்தைந்தாண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. இவர் 1899-ல் பிறந்தவர். 1926-ல் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக M. A. பட்டம் பெற்று C. M. S. மிஷனரித் தொண்டராக 1927-ல் யாழ்ப்பாணம் வந்தவர். 1954-ல் கல்விச் சேவையினின்று இளைப்பாறிய பின்னர் கிளிநொச்சியில் கருணாநிலையம் அமைத்துத் தொண்டாற்றி வருகின்றார்.

அன்னாரின் சேவைக்காக இறைவனைப் போற்றும் ஆராதனையும், பகிரங்கக் கூட்டமும் சென்ற புதன்கிழமை காலை (29-10-80) கிளிநொச்சி கருணாநிலையத்தில் நடைபெற்றது. இப்பெருமங்கல விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலரில், பேராயர் சுவிதன் பெர்னாண்டோ, பேராயர் D. J. அம்பலவாணர். வண. J. J. ஞானப்பிரகாசம், வண. சாம் ஹொகின்டன், வண. S. W. ஆரியராசா, நவஜீவனத்தார், திரு. V. ஆனந்தசங்கரி M. P., வண. அல்பிரட் சின்னையா முதலியோர் வாழ்த்துச் செய்திகள் வழங்கியுள்ளனர்.

அன்னாரின் தொண்டு தொடர, எல்லா நன்மைக்கும் காரணமாகவிருக்கும் இறைவனை வேண்டுவோமாக.

### தொலைபேசி இணைப்பு

வரணி மிஷன் பணியின் யாழ்ப்பாண விற்பனை நிலையத்திற்குச் சென்ற வாரம் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனுடைய எண் 3072.

### பொதுசன தொடர்பு அதிகாரி

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய பொதுசன தொடர்பு அதிகாரியாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. ஏ. பி. சிறிநிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

### கிறிஸ்தவ குடும்ப விழா

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீன கிறிஸ்தவ குடும்ப விழா அக்டோபர் மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை உடுவில் தேவாலயத்தில் நடைபெற்றது. ஸ்திரீகள் சங்கத்தின் செயலர் திருமதி S. R. தம்பு ஆராதனையை நடத்தினார். கலாநிதி W. L. ஜெயசிங்கம் தற்கால சமுதாயத்தில் கிறிஸ்தவ குடும்பம் என்னும் பொருளில் பேசினார். கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படும் பிரச்சினைகள் குறிப்பாகச் சந்ததி முரண் என்பவற்றை விளக்கினார். திருமதி J. J. இரத்தினராஜா திருச்சபையில் பெண்களின் பங்கு என்னும் பொருளில் பேசினார்.

வண. D. R. அம்பலவாணர் Least Coins கொடைகளின் பிரதிஷ்டை செபம் செய்தார்.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் ஒரு விசேட பாடலை வழங்கினர்.

### கிராம சேவையாளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரே இடத்தில் 5 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் கிராம சேவையாளர்களை இடமாற்றும் திட்டமொன்றை இவ்வருட இறுதியில் யாழ். அரச செயலகத்தினர் மேற்கொள்ளவுள்ளனர்.

மறுமைப் பிரவேசம்

### மங்களம் அருள்நந்தி — 44

27-10-80 திங்கட்கிழமை காலை செல்வி மங்களம் அருள்நந்தியின் மறைவுபற்றிக் கேள்விப்பட்ட உற்றார், உறவினர், சகாக்கள் ஆகியோர் பெரும் அதிர்ச்சியடைந்தனர். செல்வி மங்களம் வடமராட்சியில் மட்டுமல்ல யாழ்ப்பாணம் முழுவதிலும் நன்கு அறியப்பட்ட பேர் வழி. விசேஷமாகப் பெண் சாரணியகத்தினரின் மத்தியில் இவர் அரிய சாதனைகள் புரிந்துள்ளார்.

இவர் அறிவாளிகளின் வழித்தோன்றல் இவரது மாண்பு மிக்க தந்தை அருள்நந்தி அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வித்தியாதிபதியாகத் திகழ்ந்தார். கல்வித் துறையில் செல்வி மங்களம் பல வெற்றிகளை ஈட்டியுள்ளார். பல பட்டங்கள் பெற்றார். இவரின் அகால மரணத்தினால் பருத்தித்துறை மக்கள் ஒரு தலைசிறந்த அறிவாளியை இழந்து தவிக்கின்றனர்.

ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நன்கு பரிச்சயம் பெற்று விளங்கினார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும், ஆங்கில நாடக ஆசிரியராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தார். தம்முதவியை நாடி வந்தவர் உயர்ந்தோர் என்றால் என்ன, தாழ்ந்தோர் என்றால் என்ன, பாகுபாடின்றித் தமது திறமைகளைப் பயன்படுத்தி உதவியளித்தார்.

கிறிஸ்தவ தேவாரங்கள், கீர்த்தனைகள் முதலியவற்றை மனனம் செய்தார். மரிப்பதற்கு முதல் நாள் "திருப்பாதம் நம்பி வந்தேன்" என்ற பாட்டை உணர்ச்சியுடன் பாடினார். சாதி மத பேதம் காட்டாத பெருந்தகை இவர். இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் நிச்சயமாக ஏதோ ஒரு பெரிய கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டிருப்பார். இவர் ஒரு கல்லூரி அதிபருக்குரிய சகல இலட்சணங்களும் பொருந்தியிருந்தார்.

அறிவுத் தாகம் இவரிடம் மிதமிஞ்சிக் காணப்பட்டது. இறைவா அறிவாளிகளை ஏன் நீ இளமையில் உன்னிடம் அழைக்க வேண்டும் என்று ஏங்குகின்றனர் சிலர்.

— ஜெயதேவி குணரத்தினம்
ஏழாலை தெற்கு

---

### பேசாலையில் தொண்டர் படை

பேசாலைக் கிராமத்தில் அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களை ஒழித்துக்கட்டும் நோக்கத்துடன் பொலீஸாரின் ஆலோசனையின்பேரில் 18 பேர் கொண்ட தொண்டர் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தொண்டர் படை இரவு 10 மணிமுதல் அதிகாலை 6 மணிவரை ரோந்து கடமையில் ஈடுபடும்.

### யாழ் மாநகரம் பற்றி பிரதமரிடம் முறையீடு

யாழ் மாநகராட்சி மன்றத்தின் தற்போதைய வரி விதிப்பு முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று, பிரதமர் R. பிரேமதாசாவிடம் முறையிட யாழ். வர்த்தகர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன. சென்ற சனிக்கிழமை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவை மேற்கண்ட தீர்மானத்தை எடுத்தன.

## கடிதம்

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் இந் நாட்களில் மலேரியா நோய் பரவக்கூடுமாதலால் போதிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத குறைபாட்டிற்கு யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாக விராதென்பதை இந்நகரின் பொதுமக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டியவனாகவுள்ளேன்.

நுளம்பை ஒழித்தாலன்றி மலேரியா நோய் ஏற்படுவதையோ பரவுவதையோ யாராலும் தடுக்க முடியாது. இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்திலேதானே அதாவது நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்திலே மலத்தீனின் தட்டுப்பாடு பற்றி உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது கவனத்தை ஈர்த்திருந்தேன். யாழ்ப்பாண மாநகர சபைக்குத் தேவைப்படும் மலத்தீனைக் கொடுத்துதவும்படி அமைச்சின் செயலாளர் உடனடியாகவே கட்டளை பிறப்பித்திருந்தார். ஆயினும், சுகாதாரத் திணைக்களம் மூன்று மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் மலத்தீனை அனுப்பி வைக்கவில்லை. நுளம்பை ஒழிப்பதற்கு அவசியம் வேண்டப்படும் பொருள் மலத்தீன். மலத்தீன் இல்லாமையால் யாழ்ப்பாணத்தில் மலேரியா பரவும் ஆபத்து எழுந்துள்ளது.

அதுபோன்றே தெரு வேலைகளை உடனுக்குடன் செய்வதற்கு குறைந்த பட்சம் யாழ். மாநகர சபைக்கு இரண்டு தெரு உருளைகளாவது உடனடியாகத் தேவைப்படுகின்றது. இது விடயமும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து அவர் நேரடியாகத் தலையிட்டபோது தெரு உருளைகள் கப்பல் மூலம் பெறப்படுவதாகவும் செப்டம்பர் மாதத்தில் அவை எமக்குக் கிடைக்கக்கூடியதாக விருக்குமென்றும் உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளரால் எமக்கு அறிவிக்கப்பட்டது. இப்பொழுதோ நாம் நவம்பர் மாதத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறோம். ஆயின், கோரப்பட்ட இரண்டு தெரு உருளைகளும் இன்னும் எமக்குக் கிடைத்தபாடாகவில்லை. இதனால், இந்நகரில் செய்யப்பட வேண்டிய தெருவேலைகள் பெரிதும் தடைப்பட்டுள்ளன.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அண்மைக் காலத்தில் மாலைவேளைகளில் அனுபவிக்கப்பட்ட மின்சாரத் தடைக்குக் காரணம் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 33 கில்லோ உவோல்ற் வடம் ஒன்று தீய்ந்து போனமைதான். ஆயினும், துரித நடவடிக்கை எடுத்து அதுவிடயத்தை கடந்த வெள்ளிக்கிழமையுடன் அதன் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்தமைக்கு இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களைப் பாராட்டுகிறோம். மின்சார விநியோகம் இலங்கை மின்சார சபையால் பொறுப்பேற்கப்படுவதற்கு முன்பாகவே அத்தியாவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகளைச் செய்வதற்கு சபை ஆவலுள்ளதாகவிருந்தும், மின்சார வேலைகளுக்கு வேண்டப்படும் அத்தியாவசிய உபகரணங்களான காவலிகள் போன்ற பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை எதிர்நோக்க வேண்டிய நிலை நீடித்து வருகிறது. இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருடன் இது

## கண்காட்சி இடம்பெறும்

அடுத்தாண்டு ஜனவரி மாதம் மதுரையில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உலகத் தமிழரும் அவர்களது பிரச்சினைகளும் பற்றி ஒரு கண்காட்சியும் இடம்பெற வேண்டுமென்று நமது யாழ்ப்பாண முதல்வர் இராஜா விசுவநாதன் மதுராபுரி முதல்வரிடம் கேட்டிருந்தார். இதற்கிணங்க மேற்படி கண்காட்சி மகாநாட்டில் இடம்பெறுமென்று தெரிய வருகிறது.

## உலகின் முதலாவது வண்ணாத்திப்பூச்சிப் பூங்கா தெகிவளையில்

தெகிவளை மிருகக்காட்சிச் சாலையில் 25 முதல் 30 வகையான வண்ணாத்திப் பூச்சிகளுடன் வண்ணாத்திப்பூச்சிப் பூங்கா ஒன்று பிரதி ராஜாங்க அமைச்சர் திரு. சந்திரா கருணாரத்னவால் சென்ற 24-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே முதலாவது வண்ணாத்திப்பூச்சிப் பூங்காவாக இது அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் 242 வகையான வண்ணாத்திப்பூச்சிகள் உள்ளன.

## புதிய ஆணையாளர்

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போ ஆணையாளராக பருத்தித்துறை டிப்போ செயலாற்று உதவியாளர் R. V. சிவஞானம் பதவியுயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

---


விடயமாகத் தொடர்பு கொண்டு அவரது கவனத்தையும் ஈர்த்திருந்தோம். அதற்கு மேலாக நல்லூர் பாராளுமன்றம் உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள்கூட, இயலுமானால் யாழ். மாநகரசபைக்கு இப்பொருட்களைக் கொடுத்து உதவும்படி இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணக் கிளையிடம் கேட்டுக்கொண்டார். அவர்களாலும் சம்பந்தப்பட்ட மின் பொருள்களை இச் சபைக்கு உதவ முடியவில்லை, காரணம் அவர்களிடம் அப் பொருட்கள் கைவசம் இல்லாமையால்.

நாளாந்த பராமரிப்பு வேலைகளைக் கவனிப்பதற்கே ஊழியர் கோப்பின் படியான முழுமையான உத்தியோகத்தர்கள் இல்லாது இச்சபையின் மின்சாரப் பகுதி சிரமப்படுகிறது. ஊழியர் கோப்பின்படி மின் கம்பியிடுபவர்கள் 4 பேரும், மின்மானி வாசிப்பவர்கள் 2 பேரும் நியமனம் பெறவேண்டும். இப் பதவிகளை உடன் நிரப்புமாறு இச் சபை கேட்டு நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஆயினும் சம்பந்தப்பட்ட அப் பதவிகளை உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களம் இன்னமும் நிரப்பாதிருப்பதை வருத்தத்துடன் வரியிறுப்பாளர்களுக்கு அறியத் தருகிறேன்.

எனவே, வீடுகளுக்கான புதிய சேவை இணைப்புக்களையும், புதிது புதிதான மின்சார விஸ்தரிப்பு வேலைகளையும் மேற்கொள்ளுவதில் ஏற்படும் காலதாமதத்தை எம்முடன் சேர்ந்து பொறுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

— இ. விசுவநாதன்
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்.
22-10-80



## அழியாத கோலங்கள்

(உதயதாரகையின் ' அழியாத கோலங்கள்'' என்ற பகுதியில் காலத்தால் அழியாத கடிதங்கள், கட்டுரைகள், ஜெபங்கள், சிந்தனைகள் என்பனவற்றைத் தரவிருக்கின்றோம். முதலாவதாக 1821-ம் ஆண்டு மே மாதம் 7-ந் திகதி எழுதப்பட்ட கடிதமொன்றைத் தருகின்றோம். டானியல் புவர் அம்மாவின் மறுமைப் பிரவேசத்தைப் பற்றி உடுவில் மகளிர் கல்லூரியின் ஸ்தாபகர் ஹரியட் உவின்சிலோ அம்மையார் எழுதியது இக்கடிதம் எழுதப்பட்டபொழுது ஹரியட் உவின்சிலோ அம்மையாருக்கு வயது இருபத்தைந்து என்பது குறிப்பிடத்தக்கது.)

அவருடைய முடிவு பேரானந்தமாகவும், வெற்றியாகவும் அமைந்தது. மெல்ல மெல்ல மறைந்துபோகும் அந்த ஆன்மாவின் தலையணையருகே நிற்பதுவும், அவருடைய கடைசி வார்த்தைகளைக் கேட்பதுவும் பெரும் சலாக்கியமாகவிருந்தது.

> "எனது அருமைக் கணவனும் பிள்ளைகளுங்கூட என்னை உலகத்தோடு இனிப் பிணித்துக்கொள்ள முடியாது. அந்தப் பாசக் கயிறுகூட அறுந்துவிட்டது. இது நான் எண்ணிப்பார்க்கத் துணியாத மகோன்னத வெற்றி. எல்லாப் பிணிப்புக்களும் நீங்கிவிட்டன."

இந்த வசனத்தை அவர் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். தமது எலும்பாகிவிட்ட கரங்களை உயர்த்தித் தமது அருமைக் கணவனையும் பிள்ளைகளையும் பார்த்து,

> "கறையானும், மண்ணும், புழுக்களும் இந்தச் சரீரத்தைத் தூய்மைப்படுத்தவே செய்யும்"

என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார். (Corruption, Earth and Worms shall but refine this flesh.)

நேரம் நடுநிசியாகிவிட்டது. அவரை மெதுவாக உயர்த்தி யன்னலருகே உட்கார வைத்தோம். யன்னலுக்கு வெளியே இருள் கவ்வியிருந்தது. அப்பொழுது அவர் "புறவிருள் சூழ்ந்திருக்கிறது'' என்றார். (There is outer darkness.)

நாயொன்று பயங்கரமாக ஊளையிட்டது. அப்பொழுது தமது சிந்தனையில் இருந்து விடுபட்டு "வெளியே நாய்கள் நிற்கின்றன'' என்றார். முடிவு சமீபித்து வருவதையுணர்ந்தோம். எனவே, அவருடைய கட்டிலைச் சூழ வட்டமாக நின்று "இயேசுவே விண்சேனையோடு'' (Jesus with all thy Saints above) என்ற பாடலைப் பாட ஆரம்பித்தோம். அவ்வேளை "மகிமை தொடங்கிவிட்டது'' என்று கூறிக்கொண்டேயிருந்தார். முகம் பிரகாசமடைந்துகொண்டே வந்தது. அவருடைய சத்தம் குறைந்து வந்தது. நண்பர்களின் அழுகைதான் கேட்கக்கூடியதாகவிருந்தது.

மீண்டும் அவர் "இயேசுவை ஒளியுடனும் மகிமையுடனும் காண்கிறேன். அவருடைய தேரின் சில்லுகள்தான் எவ்வளவு பிரகாசமானவை'' என்று கூறினார்.

சுய நினைவற்றவராகிக் கொண்டிருந்தார். கடைசியாக அவர் கூறியதெல்லாம் பிதாவாகிய தேவனுக்கு மகிமை — பிதாவாகிய தேவனுக்கு — பரிசுத்தாவியாகிய தேவனுக்கு மகிமை என்பதுதான்.

ஆதாரம்: Memoirs of Harriet Winslow.
தமிழில்: எஸ். ஜெபநேசன்.

---

## "பலதும் பத்தும்"

உலகத்தின் சம்பவங்களை வெளியிடும் புத்தகங்கள் ஏற்பட்ட ஒழுங்கு.

1. புதைக்கப்பட்ட புத்தகங்கள்
   1. களிமண்ணாற் செய்த எழுத்துக்கள்.
   2. செங்கல்லினால் செய்த எழுத்துக்கள்.
   3. வெந்த களிமண்ணாற் செய்த எழுத்துக்கள்.
   4. சுவர்களின் வெளிப்புறத்தில் எழுத்துக்கள்.
   5. சிலைகளின் மேல் எழுத்துக்கள்.
2. புல்லினால் செய்த எழுத்துக்கள்.
   1. நயில் நதிக் கரையில் வளர்ந்த புற்களில் எழுதப்பட்ட எழுத்துக்கள். இவைகளைப் பூர்வகிரேக்கர் "பேப்பா'' என்று சொன்னார்கள். இதிலிருந்தே Bible என்ற பெயர் வந்தது.
3. கல்லினால் செய்த புத்தகம்.
   1. நியாயப் பிரமாணம் இதின் முறையே.
   2. தோலினால் செய்த புத்தகம். பழைய ஏற்பாடு இந்தமுறை புத்தகம்.
   3. பனை ஓலையில் செய்த ஏடுகள்.

      இந்தியரின் புராதன நூல் எல்லாம் இத்தன்மையே.
   4. காகிதங்களினாற் செய்த புத்தகங்கள்.

      இது தற்கால முறை.

ஜெபியத்துக்கு எடுக்க வேண்டிய ஆயுதங்கள்.

ஜெபிய போராட்டத்தில் தரிக்க வேண்டிய ஆயுதங்கள் தலையில் தேசாபிமானம், நெஞ்சில் சுயமரியாதை, இடது கையில் அனுகூலம், வலது கையில் செல்வாக்கு, இடுப்பில் மார்க்க வயிராக்கியம், பாதங்களில் பரோபகாரம்.

(Rev. E. K. Y. Notes).

*EDITORIAL*

## Problems of Higher Education in Sri Lanka

The Supreme Court has upheld the district basis of quota (55 per cent) currently applied by the University Grants Commission for entry to the traditional Universities of Sri Lanka.

While conceding in their judgment that it is the merit principle alone that should govern the admission of students to the university, the departure from that principle, the learned judges have held, "though unfortunate, was inevitable".

C. K. Seneviratne, a Royal College student, a minor had field the application through his mother, under article 126 of the Constitution which related to fundamental rights of citizens.

In his application, Seneviratne had stated that out of 400 places available for the medical course in Sri Lankan universities, he would be among the first 340 by virtue of his grades if not for the District quota scheme which would push him far below the line of demarcation for admissions for the medical courses.

The question whether a student should be admitted to a faculty of the University on merit or not on merit, cannot be classified as an issue, much less a legal issue. As the learned judges in the Seneviratne Case have pointed out:-

> "What remained for the court to determine was not the question whether it was legally permissible to depart from the merit principle but whether the 55 per cent basis could be justified on a rational basis.
>
> This them assumes more of a factual aspect relating *to the degree of backwardness involved* rather than a pure legal issue of the application of the principle of merit"
>
> (Italics are ours)

If we understand the implications of the Supreme Court Verdict correctly, the Court has held that it was satisfied that the University Grants Commission has correctly judged "the degree of backwardness" in certain areas in the country, (particularly in the context of conditions prevailing at the moment regarding shortage of staff and other facilities) so as to warrant a departure from the meriet principle, in the national interest.

We do hope that the ruling of the Court applies only to the Scheme of University Admissions this year, 1981 and not *a standing decision* which at a future date any university body can use as a reference point for its admission policy.

We also are of the view that this verdict is not a matter on which the Untversity Grants Commission should congratulate itself. The verdict places on the Commission a responsibility which it has to perform with a high degree of commitment, ff the future of Higher Education in Sri Lanka, is not to be sacrified at the altar of political expediency.

Who are the bona fide students of 'a district'? What constitutes an educationally backward district? What is the norm of educational facilities, the lack of which will justify a departure from the merit principle'? These are questions for which the Court expects the UGC to assume full responsibility for the correct answers that would satisfy the public.

In the immediate context of the situation prevailing in the country today, in the sphere of higher education, a comment made by the learned judges in the concluding portion of their judgment, needs, in our view, more than a cursory glance:-

> "Success at the qualifying examination does not necessarily indicate intelligence or the capacity to benefit by a university education."

Put in concrete terms, we would say that what is implied in the above comment is that a student who has taken some time off his studies to develop his sports or his aesthetic talents in school is, by all standards. a better choice for university education with his *four ordinary passes* than a student who gets top grades attending tutories for instruction in all four subjects, neglecting all other interests, the pursuance of which, makes up his total personality.

There was a time, we know, when students with two passes at the University Entrance Examination were selected to the University in preference to those who obtained three and four passes.

It is time that higher education in this country is tied up with *a daringly new approach to the problem* and not merely to the *rationalising* of a scheme of admissions year after year.

If as the learned judges have pointed out, Higher Education in Sri Lanka is to be the pathway to "the fulfilment of selfhood" the present set-up of higher education has to change. We have to be realists for the morrow and not realists only for today.

## Mrs. E. C. Lockwood

We are sorry to announce the death which took place in the States on 31-10-80 of Dorothy Lockwood whose "Letters" to the *Morning Star* since 1969, have not merely been a communication-cord between our past missionaries and ourselves but also a testament of her own devotion and love expressed in homely language, to those among whom she lived and worked for over three decades.

She has been virtually our "correspondent" in the States and had seen to it that the *Morning Star* went into the hands of everyone to whom, she thought, it should go.

Mr. and Mrs. Lockwood were missionaries of UCBWM and before coming over to Jaffna had worked for seven years at Madurai.

They came out to Jaffna College in October 1936, and within two months had to meet responsibilities which they hardly anticipated. They served the College for a period of 33 years before they returned to the States in 1969, having touched the life of the Diocese at many points.

Mrs. Lockwood's interests were varied. She was largely responsible for making the textile department of the Women's Centre a viable economic concern.

Her part in making our Annual Carol Festival of the Youth of the North (started by two missionaries, Miss L. K. Clark of Uduvil and Miss Kelk of Chundikuli) an attractive event, cannot also be easily forgotten.

Above all, she has endeared herself to many by the rapturous welcome she accorded to all those from Sri Lanka, especially from our churches, who visited her, in her home at 25 Vally Road, Milton, Mass.

"To get the full value of joy" says Mark Twain, the American Novelist, you must have someone to divide it with. Dorothy Lockwood will always be remembered for the warmth with which she ought to share ner joy with her friends.

*Appreciation*

## Miss Mangalam Arulnandhi

The passing away of Miss Mangalam Arulnandhi (44) came as a rude shock to all her near and dear ones. Mangalam is a household word not only in Vadamaradchy but through Jaffna especially in the Girl Guide movement. Mangalam was at the helm of Affairs in all functions of the Girl Guide Movement. Her dynamic personality captivaled all her associates.

She hailed irom a family of intellectuals. Her father, the late Mr. Arulnandhi was a revered personality in the educational field of the late thirties and early forties. Her achievements in the academic field are manifold. She was a brilliant student and passed all her examinations in her stride. Point Pedro has lost one of her illustrious daughers. Those who knew Mangalam intimately used to wouder, "how one small head could carry all she knew."

She was proficient in English as well as Tamil. She was a playwright, a dramtist and an orator. She was ever ready to give a helping hand to any one, high or low in the exercise of her talents. Though born as a Hindu and died as a Hindu, she had a wide circle of christian friends and relatives. On the day previous to her death, she was singing devotional Hymns, one of them being "*Thiru Patham Nambi Vanthen*" from a Hymn sheet. Had she lived for another year or two, her Alma Mater would have been honoured with the services of an energetic Principal.

In conclusion I wonld echo the words of the poet who said:

I cannot say and I will not say that she is dead,
She is just away with the cheery
Smile and a wove of hand,
She has wandered into an
unknown land,
And left us dreaming.........
........ Earth has no sorrow that heaven cannot heal.

**Jeyathevy Gunaratnam**

*Methodist Chnrch*

## Sri Lankan Methodist Minister in US Church Board

The Rev. D. S. Dharmapalan, formerly a Minister of the Sri Lanka Methodist Church, and presently serving the Methodist Church in the United States of America has been recently elected to the Church's National Board of Discipleship. This is a coveted appointment since he is the only Minister to represent the Methodist Conference on this Board. He will serve in this capacity for the next four years.

The Methodist Church in the USA has a total membership of 11 million people, and is the larger protestant denomination in the country.

*Jaffna College*

## Assembly to remember Mrs. Lockwood

A Special Assembly was held on Monday (3-11-80) to commemorate the life and work of Mrs. Lockwood at Jaffna College.

Mr. A. R. Kadirgamar referred to Mrs. Lockwood as the strongest link between the College and America and her home in America as a place where many Sri Lankans were made at home.

The School was closed at 12 noon as a mark of respect for Mrs. Lockwood.

## Examination Success

Paul Hoole has passed his M. Sc. in Electrical and Electronics Engineering from Queen Mary's College, London with Distinction. He is the son of the Late Rev. R. H. R. Hoole and Mrs. Jeevamany Hoole.

Jesvan Hoole, who two years back, passed the same Examination with Distinction and stood first is here on a short holiday from a teaching assignment in Nigeria before proceeding to the McGill University in Canada to work on his P. H. D. His brother Paul will also be here before proceeding for work in Singapore.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 7th November, 1980.